# திருமந்திரத்தில் திருநங்கையர்

**முனைவர் கி. அய்யப்பன்**

# Thirumanthirathil Thirunangaiyar

**Dr. Iyyappan K**

**Abstract**
*Thirumanthiram written by Thirumoolar is one of the most important Saiva Siththantha Religious literature in Tamil. In this book, three poem 471, 472 and 476 talk about the birth of male, female and Ali (Transgender). According to Thirumanthiram a child is born as a Transgender if the left and right breaths are equal during male and female sexual intercourse. In 1872 verse says that the place of worship of the Lord is not discriminated between the Lord, the woman, man and the pedu. In Tamil literature, there is a tradition of worshiping the Lord as male, female and transgender (Ali) at the place of worship. But only in Thirumanthiram is the word Pedu used instead of Ali.*

**Keywords:** *Thirumanthiram, Transgender, Pedu, Ali, Thirunangaiyar*

சமூகத்தில் விளிம்புநிலையில் திருநங்கையர் வருகின்றனர். தமிழ் இலக்கியங்களில் இவர்களைப் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன. இலக்கியங்களில் இவர்கள் அலி, பேடி, பேடு முதலிய பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரவாணி என்னும் பெயர் 12-05-1997 அன்று முதல் வழங்கப்பட்டு வருகிறது. இப்பெயரை வைத்தவர் ஆர். இரவி அப்போதைய விழுப்புரம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர். திருநங்கை எனும் பெயரை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் நர்த்தகி நடராஜ். இவர் ஒரு திருநங்கை என்பது குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். அதன் பின்பு அரசியல் சார்ந்த நிலையில் 2007-ஆம் ஆண்டில் திருநங்கை எனும் பெயரை சமூகத்திற்கு அடையாளப்படுத்தியவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள். இவ்வாறு சமூகத்தில் நம்முடன் வாழ்ந்துகொண்டிருக்கும் திருநங்கையரைப் பற்றி திருமூலர் திருமந்திரத்தில் 471, 472, 476, 1872 ஆகிய பாடல்களில் பதிவு செய்துள்ள பாங்கினை ஆராய இக்கட்டுரை முற்படுகிறது.

**திருமந்திரம்**

இந்நூல் திருமூலரால் எழுதப்பட்ட ஒரு தமிழ் சைவசமயம் சார்ந்த நூலாகும். ”இதன் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு. இது ஒன்பது தந்திரங்களைக் (இயல்கள்) கொண்டது. மூவாயிரம் பாடல்கள் உடையது. சராசரியாக ஒவ்வொரு பாடலும் நான்கு வரிகளாகவும், ஒவ்வொரு வரியும் நான்கு சொற்களைக் கொண்டதாகவும், மொத்தம் 192000 சொற்களைக் கொண்டது. திருமந்திரம் எடுத்துக்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2022, IRJTSR 

கொண்ட பொருளை எளிய சொற்களால் அனைவருக்கும் புரியும்படி திருக்குறளைப்போல் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறுகிறது" என்பதை விக்கிப் பீடியா இணையப் பக்கங்கள் மூலம் தெரிந்துகொள்ளமுடிகிறது.

இந்நூல் சைவத் திருமுறைகளுள் பத்தாவதாக இடம்பெற்றுள்ளது. தமிழ் மொழியில் பெருஞ்சிறப்புக்கு உரிய முதன்மையான நூல்களைத் தொகுத்து உரைக்கும் ஒரு பழம்பாடல் உள்ளது. அதில் திருமந்திரமும் இணைக்கப் பெற்றிருப்பது இதன் சிறப்பிற்குச் சான்று கூறி நிற்கிறது. சைவ ஆகமங்களின் சாரமாகத் திகழும் இந்நூலை, தமிழில் எழுந்த சைவசமயம் சார்ந்த ஒரு கலைக்களஞ்சியம் என்றே கூறலாம். திருமந்திரம் ஒன்பது உட்பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொரு பிரிவும் ஒரு 'தந்திரம்' என குறிப்பிடப்படுகிறது. இந்த ஒன்பது தந்திரங்களும், ஆகமங்கள் ஒன்பதின் சாரமாக அமைந்துள்ளன. ஆகமங்கள் 28, அவற்றுள் ஒன்பதின் சாரமாக 9 தந்திரங்கள் அமைந்துள்ளன. அந்த ஆகமங்கள் வருமாறு: காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்பன. இதில் இரண்டாம் தந்திரத்தில் 471, 472, 476 ஆகிய மூன்று பாடல்களிலும், ஏழாம் தந்திரத்தில் 1872 வது பாடலிலும் திருநங்கையரைக் குறிக்கும் அலி, பேடு என்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன.

**ஆண் பெண் திருநங்கை பிறப்பு பற்றி திருமந்திரம்**

திருமந்திரம் சைவ சமயம் சார்ந்த நூலாக இருந்தாலும் மனித வாழ்வின் இயல்புகளை கூறுவதாகவும் அமைகிறது. இதன் அடிப்படையில் ஆண், பெண் மற்றும் அலிப்பிறப்பு பற்றியும் பேசுகிறது.

"மாண்பது வாக வளர்கின்ற வன்னியும்
காண்பது ஆண்பெண் அலியென்னுங் கற்பனை
பூண்பது மாதா பிதாவழி போலவே
ஆம்பதி செய்தான்அச் சோதிதன் ஆண்மையே"

(திருமந்திரம், இரண்டாம் தந்திரம் : 471)

இப்பாடலில் பெருமைக்குரியதான பரம்பொருள் ஒன்றியிருக்கின்ற இந்த உடம்பிலிருந்து வளர்கின்ற உயிர்ப்பான நெருப்பை ஆண் என்றும், பெண் என்றும், இரண்டும் அற்ற அலி என்றும் வேறுபடுத்திப் பிரித்தறிய முயலுவது வெறும் கற்பனையே என்றும் அப்படி வளர்கின்ற உயிர்கள் அந்தந்த உயிர்களின் தாய், தந்தையின் தன்மைகளையே கொண்டிருக்கும்படி உடலைப் படைத்துள்ளது ஒளி வடிவமாகிய பரம்பொருளின் வல்லமையே என்றும் பதிவு செய்துள்ளதை அறிகிறோம்.

"ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகும்
தாண்மிகு மாகில் தரணி முழுதாளும்
பாணவ மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே"

(திருமந்திரம், இரண்டாம் தந்திரம் : 472)

இந்த பாடலில் உடலுறவின்போது ஆணிடம் தோன்றும் சுக்கிலம் அதிகமானால் பிறக்கின்ற குழந்தை ஆணாக இருக்கும்(ஆண்மிகும்) என்றும் பெண்ணிடம் உண்டாகும் சுரோணிதம் மிகுந்தால் பிறக்கின்ற குழந்தை பெண் குழந்தையாகப் பிறக்கும் என்றும் சொல்கிறது. மேலும், இந்தச் சுக்கிலம் சுரோணிதம் இரண்டும் சமமாகக் கலந்து தோன்றினால் பிறப்பது அலியாகப் பிறக்கும் என்றும் ஆணின் முயற்சி உடலுறவின்போது அதிகமானால் உலகம் முழுவதும் ஆளும் வல்லமை உடைய குழந்தை பிறக்கும் என்றும் ஆணின் விந்து தண்மையதாகக் கெட்டிப்பட்டதாயின் அது வெளிப்பட்டுப் பெண்ணின் சுரோணிதத்துடன் சேர்ந்தும் பயனில்லை என்றும் பதிவு செய்யப்பட்டுளதை காணமுடிகிறது.

"குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்
குழவி இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலியாகும் கொண்டகால் ஒக்கிலே"

(திருமந்திரம், இரண்டாம் தந்திரம், 476)

மேற்கண்ட பாடலில் உடலுறவின் போது, ஆணுக்கும் பெண்ணுக்கும் மூச்சுக்காற்று வலது பக்க மூக்கு வழியாக வெளிப்பட்டால், பிறக்கின்ற குழந்தை ஆணாகப் பிறக்கும் என்றும் மூச்சுக்காற்று இருவருக்கும் இடப்பக்கம் வெளிப்பட்டால் பிறக்கின்ற குழந்தை பெண்ணாகப் பிறக்கும் (அபானன் - மலக்காற்று) என்றும் அயனவாயு எதிர்த்து வந்தால், சுக்கிலம் சிதறி இரட்டைக் குழந்தைகள் பிறக்கும் என்றும் கூறுகிறது. மேலும், இப்பாடலில் இருவருக்கும் இடப்பக்க மூச்சுக் காற்றும், வலப்பக்க மூச்சுக் காற்றும் சமமாக இருக்குமானால் குழந்தை அலியாகப் பிறக்கும் என்றும் சொல்கிறது திருமந்திரம். இங்கு நாம் கவனிக்கத் தக்க ஒன்று, மனிதர்களில் ஆண், பெண்ணுக்கு அடுத்த நிலையில் திருநங்கையரும் வைக்கப்பட்டிருந்தனர் என்பதை திருமந்திரம் வழி அறியமுடிகிறது.

**இறைவனின் வடிவங்களை கூறுமிடத்து திருநங்கையர்**

இறைவன் எங்கும் நிறைந்த பரம்பொருள். திருமந்திரம் இறைவனின் வடிவத்தை பேசும் இடத்து ஆண், பெண் அல்லாதவன் என்று கூறும். அடுத்ததாக பேடு அல்லாதவன் என்கிறது. இப்பதிவின் மூலம் திருநங்கையர் சமூகத்தில் இருந்திருக்கிறார்கள் என்பதை உணர முடிகிறது. அதே

சமயத்தில் திருமந்திரம் மானிடர்களான ஆண், பெண்ணுக்கு அடுத்த நிலையில் உள்ள திருநங்கையரையும் மானிடர் என்ற நிலையிலே பதிவு செய்துள்ளதைக் காணமுடிகிறது.

“பெண் அல்ல ஆண் அல்ல பேடு அல்ல மூடத்துள்
உள்நின்ற சோதி ஒருவர்க்கு அறிஞனாக்
கண்இன்றிக் காணும் செவிஇன்றிக் கேட்டிடும்
அண்ணல் பெருமையை ஆய்ந்தது மூப்பே”

(திருமந்திரம், ஏழாம் தந்திரம், 1872)

மேற்கண்ட பாடலில் இறைவன், பெண், ஆண், பேடு என்ற பாகுபாடு உடையவன் அல்லன். அண்டகோசத்தால் மூடியிருக்கும் போது உள்ளே உள்ள அச்சோதியை எவராலும் அறிதற்கு இயலாது என்றும் கண்ணான கருவி இல்லாமலேயே காணும். செவி இல்லாமல் கேட்கும். சோதிக்குள் சோதியாய் விளங்குவான். அத்தகைய சிவத்தின் பெருமையை ஆராய்ந்து அறிவதே முதிர்ந்த ஞானம் அறிவு என்றும் திருமூலர் கூறுகிறார்.

இவ்வாறாக திருமந்திரம் திருநங்கையரின் பிறப்பு பற்றி மூன்று பாடல்களில் பேசுவதைக் காணமுடிகிறது. இறைவனை வழிபடும் இடத்து ஆண், பெண்ணிற்கு அடுத்த நிலையில் திருநங்கையரும்(பேடு) ஒரு பாடலில் பேசப்படுவதைக் காணமுடிகிறது. பக்தி இலக்கியங்களில் இறைவனை வழிபடும் இடத்து ஆண், பெண்ணுக்கு அடுத்த நிலையில் அலி (தேவாரம், அப்பர், 2895. நாலாயிர திவ்ய பிரபந்தம், 2245, நம். திருவாய். 2.5.10) என்று கூறும் மரபிலிருந்து வேறுபட்டு ஆண், பெண்ணிற்கு அடுத்த நிலையில் அலிக்கு பதிலாக பேடு (பாடல் எண்: 1872) என்று திருமந்திரம் குறிப்பிடுவதன் மூலம் அலி, பேடு என்பதன் பொருள் ஒன்றே என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. தற்காலத்தில் திருநங்கையர்கள் தங்களை சமூகத்தின் அனைத்து நிலையிலும் மூன்றாம் பாலினமாக அங்கீகரிக்க வேண்டும் என்று போராடி வருகின்றனர். தில்லி உச்ச நீதி மன்றமும் 15-04-2014 அன்று வழங்கியுள்ள தீர்ப்பில் திருநங்கையரை(Transgender) மூன்றாம் பாலினமாக அங்கீகரித்து அனைத்து இடங்களிலும் உரிய அங்கீகாரம் கொடுக்க ஆனை பிறப்பித்துள்ளது. ஆனால், பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய திருமந்திரம் திருநங்கையரை ஆண், பெண்ணுக்கு அடுத்த நிலையில் வைத்துப் பார்க்கிறது. மேலும், திருநங்கையர் பிறப்பும் ஆண், பெண் போன்று இயற்கையானதே என்பதை தெளிவு படுத்துகிறது.

திருநங்கையர் தோன்றும் விதம் பற்றி திருமந்திரத்தின் 471, 472, 476 ஆகிய பாடல்களில் விளக்கப்படுகின்றன. பல துறைகளிலும் அறிவியல் வளர்ந்து விட்ட இக்காலத்திலும் திருநங்கையர் பிறப்புப் பற்றி சரியான புரிதல் இல்லாத நிலையில் ஏறக்குறைய 1500 ஆண்டுகளுக்கு முன்பே திருமந்திரம் ஆண், பெண், திருநங்கையர் பிறப்புப் பற்றி பேசியுள்ளதை தமிழனின் அறிவியல்

சிந்தனைக்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாக கொள்ளலாம். இந்த பின்புலத்தில் திருநங்கையரின் பிறப்பு பற்றி சமூகம் தெரிந்துகொள்ள சிறந்ததொரு ஆதாரமாக திருமந்திரம் விளங்குகிறது.

## Reference

[1] Manikkavasagan, G (Description), 2006, Thirumoolar Thirumanthiram, Uma publications, Chennai

[2] Iramalinga Thambiran Swamigal (Editor), 1974, Thirumanthiram, First 3 Thanthirangal, Tharumai Athinam, Tharumapuram.

[3] Munis.V., 2013, Kalanthorum Thamizh Ilakkanangalil Munram Palinam, Sollankati, Chennai.

[4] https://ta.wikipedia.org/s/1due